DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 135 of 2018

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 6

Name : திரு.லோகநாதன்

Age : 50

Father's/Husband's Name : கந்தசாமி

Village : திருமலைநாயக்கன்பாளையம்

Taluk : பல்லடம்

Occupation : விவசாயம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2022

முதல் விசாரணை: நாள்:16.03.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 25.08.2016 அன்று மாலை 4.30-4.45 மணியளவில் வேலம்பட்டி அருகே பள்ளக்காட்டு தோட்டம் அருகே கார்த்திக் மற்றும் சரவணன் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் வந்ததாகவும், எதிரே வந்த செவர்லெட் ஸ்பார்க் கார் இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். அடுத்த நாள் காலை சம்பவ இடத்தில் போலீசார் விசாரணை செய்து வரைபடம் வரைந்துக்கொண்டிருந்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில்

உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும், மேப் வரைந்திருந்தார்கள், வாகனம் மோதியது குறித்து அதில் எழுதப்பட்டிருந்தது. சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றனே் என்றால் அடுத்த நாள் காலை 7–7.30 மணிக்கு சென்றேன். எந்தெந்த வாகனங்கள் எவ்வாறு மோதிக்கொண்டது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் போலீசார் சொல்லியதின்பேரில் எனக்கு தெரியும். இறந்துபோன கார்த்திக் எனக்கு உறவினரா என்றால் இல்லை. இறந்துபோன நபருக்கு இழப்பீடு பெற்றுத்தரவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 135 of 2018

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 5

| | |
|---|---|
| Name | : திரு.சரவணன் |
| Age | : 25 |
| Father's/Husband's Name | : ராமசாமி |
| Village | : வேலம்பட்டி |
| Taluk | : பல்லடம் |
| Occupation | : பொறியாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2022

முதல் விசாரணை: நாள்:16.03.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு கட்டிட பொறியாளராக வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன கார்த்திக் எனது நண்பர் ஆவார். கடந்த 25.08.2016 அன்று மாலை 4.45 மணியளவில் நானும், கார்த்திக்கும் வேலம்பட்டி அருகே பள்ளக்காட்டு தோட்டம் அருகே TN 39 AD 0478 TVS Victor இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தபோது எங்களுக்கு எதிரில் வந்த TN 30 AA 9100 என்ற பதிவெண் கொண்ட பச்சை நிற செவர்லெட் கார் ஒன்று மற்றொரு வாகனத்தை முந்தி

செல்ல முயன்றபோது எங்கள் மீது மோதியதில் நான் தூக்கி வீசப்பட்டேன். எனக்கு இடுப்பு, கை மற்றும் வலதுபுறம் முழுவதுமாக அடிபட்டது. நான் சிகிச்சைக்காக திருப்பூர் குமரன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு பிறகு மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் உள்நோயாளியாக 2 மாதங்கள் சிகிச்சையில் இருந்தேன். அதன்பிறகு 6 மாதங்கள் நடக்கமுடியாமல் வீட்டிலேயே இருந்தேன். பிறகு ஒரு வருடத்திற்கு குச்சியை ஊன்றிதான் நடந்து கொண்டிருந்தேன். கார்த்திக் வண்டியை ஓட்டியதால் அவர் முன்புறம் இருந்ததால் அவருக்கு வலதுபுறம் உடல் முழுவதுமாக அடிபட்டது. கார்த்திக்கிற்கு குமரன் மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டது. பின்பு கோவை கங்கா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் இறந்துவிட்டார். அந்த காரை ஓட்டி வந்த ஓட்டுநரை நான் நேரில் பார்த்ததால் அடையாளம் காண்பிப்பேன். (எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, எதிரியை அடையாளம் காண்பிப்பதற்காக முதல் விசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது)

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 135 of 2018

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 4

Name : திரு.ரவிச்சந்திரன்

Age : 51

Father's/Husband's Name : குப்புச்சாமி

Village : காட்டுப்பாளையம்

Taluk : பல்லடம்

Occupation : உரக்கடை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2022

முதல் விசாரணை: நாள்:16.03.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு உரக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன கார்த்திக் எனது உறவினர் ஆவார். கடந்த 25.08.2016 அன்று மாலை 4.45 மணியளவில் வேலம்பட்டி அருகே இருசக்கர வாகனத்தில் கார்த்திக் கல்லூரிக்கு சென்றுவிட்டு திரும்பி வந்துக்கொண்டிருந்தபோது செவர்லெட் கார் ஒன்று கார்த்திக் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். அவரை திருப்பூர் குமரன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்தார்கள். அன்று

இரவு கார்த்திக்கின் உடலை பல்லடம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர். நான் அங்கு வைத்து பார்த்தேன். போலீசார் மருத்துவமனைக்கு வந்து விசாரணை செய்தபோது காத்திக்கின் உடலை அடையாளம் காண்பித்தேன். பிரேத விசாரணையின்போது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விபட்டுதான் சென்று பார்த்தேன்.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 135 of 2018

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 3

Name : திரு.லோகநாதன்

Age : 52

Father's/Husband's Name : சுப்புராயன்

Village : காட்டுப்பாளையம்

Taluk : பல்லடம்

Occupation : விவசாயம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2022

முதல் விசாரணை: நாள்:16.03.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு விவசாயம் தொழில் செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன கார்த்திக் என் அத்தையின் பேரன் ஆவார். கடந்த 25.08.2016 அன்று மாலை 4.45 மணியளவில் வேலம்பட்டி அருகே இருசக்கர வாகனத்தில் கார்த்திக் கல்லூரிக்கு சென்றுவிட்டு திரும்பி வந்துக்கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் வீட்டிலிருந்து கிளம்பி கோவை கங்கா மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். கோவை கங்கா மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே கார்த்திக் இறந்துவிட்டதாக

கூறினார்கள். போலீசார் மருத்துவமனைக்கு வந்து விசாரணை செய்தபோது காத்திக்கின் உடலை அடையாளம் காண்பித்தேன். பிரேத விசாரணையின்போது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விபட்டுதான் சென்று பார்த்தேன்.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஓம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 135 of 2018

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 2

Name : திரு.பாரதி

Age : 28

Father's/Husband's Name : முத்துச்சாமி

Village : காட்டுப்பாளையம்

Taluk : பல்லடம்

Occupation : கோழிப்பண்ணை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2022

முதல் விசாரணை: நாள்:16.03.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு கோழிப்பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன கார்த்திக் என் தம்பி ஆவார். கடந்த 25.08.2016 அன்று மாலை 4.45 மணியளவில் எனது தம்பி கார்த்திக் கல்லூரிக்கு சென்றுவிட்டு வேலம்பட்டி, புளியங்காட்டுத்தோட்டம் அருகே TN 39 AD 0478 என்ற பதிவெண் கொண்ட டிவிஎஸ் விக்டர் இருசக்கர வாகனத்தில் திருப்பூர்–தாராபுரம் ரோட்டில் வடக்கு நோக்கி வந்துக்கொண்டிருந்தபோது TN 30 AA 9100 என்ற பதிவெண் கொண்ட செவர்லெட் ஸ்பார்க் கார் ஒன்று வேகமாக வந்து என்

தம்பி மீது மோதியதில் என் தம்பிக்கு விபத்து ஏற்பட்டதாக என் அப்பா தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டு பிறகு குமரன் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் அங்கு செல்வதற்குள் என் தம்பியை சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்தார்கள். நான் கோவை கங்கா மருத்துவமனைக்கு சென்று என் தம்பியை பார்த்தேன். எனது தம்பி கோவை கங்கா மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்பு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் தம்பிக்கு கை, தோள்பட்டை, கால் ஆகிய இடங்களில் அடிபட்டிருந்தது. இதுகுறித்து அவினாசிபாளையம் காவல்நிலையத்தில் என் அப்பா புகார் கொடுத்தார். போலீசார் மருத்துவமனைக்கு வந்து விசாரணை செய்தபோது என் தம்பியின் உடலை அடையாளம் காண்பித்தேன். பிரேத விசாரணையின்போது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விபட்டுதான் சென்று பார்த்தேன்.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஓம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

| | |
|---|---|
| Calender | |
| Miscellaneous | Case No:CC 135 of 2018 |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | PW 1 |
| Name | : திரு.முத்துச்சாமி |
| Age | : 58 |
| Father's/Husband's Name | : பொன்னுச்சாமி |
| Village | : காட்டுப்பாளையம் |
| Taluk | : பல்லடம் |
| Occupation | : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2022

முதல் விசாரணை: நாள்:16.03.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு விவசாயம் வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன கார்த்திக் என் மகன் ஆவார். கடந்த 25.08.2016 அன்று மாலை 4.45 மணியளவில் எனது மகன் கார்த்திக் TN 39 AD 0478 என்ற பதிவெண் கொண்ட விக்டர் இருசக்கர வாகனத்தில் திருப்பூர்–தாராபுரம் ரோட்டில் வடக்கு நோக்கி வந்துக்கொண்டிருந்தபோது பள்ளக்காட்டு தோட்டம் அருகே TN 30 AA 9100 என்ற பதிவெண் கொண்ட கார் ஒன்று என் மகன் மீது மோதியதில் என் மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான்

அப்போது தோட்டத்திலிருந்தேன். நான் உடனடியாக குமரன் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு என் மகனுக்கு வலது கை நொறுங்கிபோய் இருந்தது. கால், தோள்பட்டையில் அடிபட்டிருந்தது. வலதுபுறம் முழுவதும் அடிபட்டிருந்தது. பின்பு மேல்சிகிச்சைக்காக என் மகனை கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே என் மகன் இறந்துவிட்டான். இதுகுறித்து அவினாசிபாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுாான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது..

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்